# செய்திகளும் குறிப்புகளும்

**07.11.2024, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1081**

---

**ஸ்ரீ அரவிந்தர் - மனித சக்கரம்** (Human cycle)

**20. பகுத்தறிவு வளைமுகட்டின் முடிவு**

மக்கள் கூட்டம் இன்னும் முழுவதும் பகுத்தறிவுள்ள வளர்ச்சிபெற்ற மனமுடையவர்களாக ஆகாமலிருப்பதால், நாட்டை உடனடியாக சமதர்மம் உடையதாக்குதல், நாட்டரசாங்கம் என்ற ஒன்று இருக்கவேண்டிய நடைமுறைத் தேவையை மாற்றிடும் என்று நினைக்கக் காரணமில்லை.

பகுத்தறிவினும் தாழ்ந்த சமுதாயங்களில், குறைந்தபட்சம், அவற்றின் தொடக்கத்திலாவது. ஆட்சி செய்தது நாட்டரசன்று; ஆனால் குழு-ஆன்மாவே தானே தன் வாழ்க்கையின் பரிணாமவளர்ச்சியில் வழக்கமான அமைப்புகளையும், அனைவரும் கீழ்ப்படிய வேண்டியிருந்த சுயகட்டுப்பாடுகளையும் உருவாக்கியது. ஏனென்றால் ஆட்சியாளர்கள் அவற்றைச் செயற்படுத்துபவர்களாக, கருவிகளாக மட்டுமே இருந்தனர். இது தனிமனிதன் சமுதாயத்திற்கு மிகவும் கீழ்ப்படிவதைத் தவிர்க்க முடியாததாக்கியது. ஆனால் அது உணரப்படவில்லை, ஏனென்றால் தனிமனித உரிமைக்கருத்து இன்னமும் பிறந்திருக்கவில்லை. மேலும் எழுந்த வேற்றுமைகளுக்கு ஏதேனும் ஒரு வழியாலோ அல்லது மற்றொரு வழியாலோ இயற்கையான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டது - சில சமயங்களில் ஒருகுறிப்பிடத்தக்க தாராளமான சமுதாய மாற்றத்தின் மூலம் ஏற்பாடு செய்துகொடுக்கப்பட்டது, இத்தகைய மாற்றத்தை நாட்டின் அரசாங்கம் மேலும் மேலும் அடக்கவே முற்படுகிறது. அரசாங்க அமைப்பு வளர்கையில், சிறுபான்மையினர் பெரும்பான்மையினராலும் அல்லது பெரும்பான்மையினர் சிறுபான்மையினராலும், தனிமனிதன் கூட்டாண்மையாலும் இறுதியில் அனைவரும் அரசின் கருணையற்ற எந்திர இயக்கத்தாலும் அடக்கியொடுக்கப்படுகிறார்கள். ஜனநாயக சுதந்தரம் இந்த அடக்கியொடுக்கலைக் குறைக்க முயன்றது, அது தனிமனிதன் சுதந்தரமாக செயல்பட அனுமதித்தது, மேலும் அரசின் பங்கை ஓர் அளவிற்குட்படுத்தியது. கூட்டாண்மை இதற்கு நேரெதிர் கோடிக்குச் செல்கிறது, அது தனிமனிதன் சுதந்தரமாகச் செயல்படப் போதிய இடமளிக்காது. மேலும் அது ஓர் உயர்ந்த வளர்ச்சியடைந்த உலகளாவிய கல்வியால் தனிமனிதனை எவ்வளவு அதிகமாக பகுத்தறிவுடையவனாக ஆக்குகிறதோ அவ்வளவுக்கு, - உண்மையிலேயே அனைத்து சுதந்தரச் சிந்தனையும் மறுக்கப்படாலொழிய, அனைவரும் ஒரே மாதிரியான தரப் படுத்தப்பட்ட வழியில் சிந்திக்கும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டாலொழிய, இந்த அடக்கியொடுக்கலும் அதிகமாக உணரப்படும்.

மனிதன் வளர்ச்சியடைய அவனுக்குச் சிந்தனையில், வாழ்க்கையில், செயலில் சுதந்தரம் தேவையாகும். இல்லையேல் அவன் இருந்த இடத்திலேயே இருப்பான், வளர்ச்சி குன்றியவனாக தேக்கநிலையிலே இருப்பான். அவனுடைய தனித்த மனமும் பகுத்தறிவும் நன்றாக வளரவில்லையானால், பகுத்தறிவினும் தாழ்ந்த மனத்தையுடைய மனிதன் குழு-ஆன்மாவில் மந்தையில், கூட்டத்தில் இயற்கையின் தாழ்ந்த செயல்முறையில் எல்லாருக்கும் பொதுவாகவுள்ள நுட்பமான அரையுணர்வுப் பரிணாமத்தின்படி வளரச் சம்மதிக்கலாம். அவன் தனித்த பகுத்தறிவையும் விருப்பாற்றலையும் வளர்த்துக்கொள்கையில், அவனுக்குத் தனிமனித சுதந்தரமும் வேறுபாடும் தேவைப்படுகிறது; ஆகவே சமுதாயம் அதிகம் அதிகமாகத் தனிமனித சுதந்தரத்திற்கும் வேறுபாட்டிற்கும் இடமளிக்க வேண்டும், குறைந்தபட்சம் அதன் வளர்ச்சி மற்றவர்களுக்கும் சமுதாய முழுமைக்கும் தவிர்க்கக்கூடிய தீங்கு பயக்காமல் இருக்கும் வரையாவது அவற்றிற்கு இடமளிக்கவேண்டும். தனிமனித மனத்திற்கு முழுவளர்ச்சியும் சுதந்தரமான செயற்பாடும் அளிக்கப்படுமானால், இந்த வளர்ச்சி கொண்டு வரும் பெரும் வேறுபாடுகளினால் சுதந்தரத்திற்கான இந்தத் தேவை வளரும். மேலும் ஒரு சுதந்தரமான சிந்தனையிலும் மற்றும் பகுத்தறிவிலும் மட்டுமே சுதந்திரமான செயல்பாடு அனுமதிக்கப்பட்டு, ஆனால், வாழ்க்கையில் தனிமனித இச்சையின் செயற்பாடு, மிகையான வாழ்க்கைக் கட்டுப்பாடுகளால் ஒடுக்கப்பட்டால், அதன்பிறகு, பொறுக்கமுடியாத முரண்பாடும் பொய்ம்மையும் உண்டாக்கப்படலாம். மனிதர்கள் சிறிது காலத்திற்குக் கூட்டாண்மைச் சமுதாயத்தின் ஏற்பாடு கொண்டுவரும் மிகப்பெரிய, வெளிப்படையாகத் தெரிகிற ஒழுங்கின் புதிய நன்மைகள், பொருளாதார வளர்ச்சி, திறமைக்கான வழிவகைகள் மற்றும் பகுத்தறிவின் விஞ்ஞான மனநிறைவு இவற்றைக் கருதி அதைப் பொறுத்துக் கொள்ளலாம், ஆனால் அந்த நன்மைகள் நாளடை வில் பழக்கமாகப் போய் அதனுடைய குறைபாடுகள் மேன்மேலும் உணரப்பட்டு வெளிப்படையாகக் காணப்படும்பொழுது, சமுதாயத்தில் உள்ள அறிவுத் தெளிவும் தீவிர ஊக்கமும் உடைய மனிதர்களிடையே அதிருப்தியும் எதிர்ப்புணர்ச்சியும் நிச்சயம் தோன்றும், பிறகு அது பாமரர்களிடையேயும் பரவும். அறிவாற்றலுக்கும் உயிர் சக்திக்கும் ஏற்படும் இந்த அதிருப்தி இத்தகைய சூழ்நிலையில் ஒரு அராஜகச் சிந்தனையை மேற்கொள்ளக் கூடும், ஏனென்றால் அகவாழ்க்கையிலும் அதனுடைய புறவெளிப்பாட்டிலும் தேவைப்படும் சுதந்தரமான வேறுபாட்டிற்கு அந்தச் சிந்தனை கவர்ச்சியளிக்கிறது; அதுவே கிளர்ச்சியைத் தூண்டுகிற மூலமாகும்; மேலும் அராஜகச்சிந்தனை நிச்சயமாக, சமதர்ம முறைமையை நிலை குலைக்கவல்லது. நாட்டு அரசாங்கம் அதனுடைய நிலைத்த வாழ்க்கை வடிவங்களுக்குப் பொருத்தமாக்கப்பட்ட ஒரு கல்வியால் மட்டுமே இதை எதிர்த்துப் போராட முடியும், மேலும் பழைய பகுத்தறிவினும் தாழ்ந்த ஏற்பாட்டில் செய்யப்பட்டதைப் போல. குடிமகனை ஒரு வளர்ச்சியற்ற வரையறுக்கப்பட்ட கருத்துகள், இச்சைகள், மனப்பாங்குகள், இவற்றில் கண்டிப்பான பயிற்சியளிக்கும் கல்வியாலும் மற்றும் அனைவரையும் ஒரே மனத்தினராக, ஒரே உணர்ச்சிப் பாங்குள்ளவர்களாக, ஒரே கருத்துடையவர்களாக இருக்கப் பயிற்சியளிப்பதற்கும் கட்டாயப்படுத்துவதற்கும், பேச்சு சுதந்தரத்தையும் சிந்திக்கும் சுதந்தரத்தையும் அடக்கியொடுகக்குவதாலுமே இதைச் செய்யமுடியும்; ஆனால் இந்தத் தீர்வு ஒரு பகுத்தறிவுபெற்ற சமுதாயத்தில் சுய- முரண்பாடுடையதாகவும் செயல்பட முடியாததாகவும் இருக்கும், அல்லது செயலுக்கு வந்தால், அப்பொழுது அது எதை எதிர்த்து நிற்க முயல்கிறதோ, அந்தத் தீங்கைவிட மோசமானதாக இருக்கும். அதற்கு மாறாக, ஆரம்பத்திலேயே சிந்தனைச் சுதந்தரம் மறுக்கப்பட்டால் அது பகுத்தறிவு யுகத்தின், பகுத்தறிவு சமுதாயக் குறிக்கோளின் முடிவு என்று பொருள்படும். ஒரு குறுகிய நிலைத்த வழித்தடத்தில் தவிர, அவனுடைய மனத்தையும் மனத்தின் விருப்பாற்றலையும் பயன்படுத்த அனுமதிக்கப்படாதபோது மனஜீவனான மனிதன் அவனுடைய வளர்ச்சியில் தடைபட்டு நின்று விடுவான், மேலும் விலங்கினத்தைப் போலப் பூச்சியினத்தைப் போல ஒரு மாறாத உயிரினமாகக் கூட ஆகிவிடுவான்.

ஒரு சமதர்ம நாட்டின் இந்த மையக் குறைபாட்டினால் அது நிச்சயமாகப் போதாமை என்ற குற்றம் சாட்டப்படுவதற்குள்ளாகி, ஒரு புதிய குறிக்கோள் வளர்வதற்கு முன்பாக இறந்துபட வேண்டியதாகும். ஏற்கெனவே தனிமனிதனுடைய வாழ்க்கையில் அரசாங்க அமைப்பின் அழுத்தம் பொறுத்துக் கொள்ள முடியாத கட்டத்தை அடைந்துவிட்டது. தனிமனிதனுடைய வாழ்க்கை அது பாசாங்கு செய்வதுபோல் ஒரு பொதுவான விருப்பாற்றல்படியும் பகுத்தறிவுப்படியும் அல்லாமல். அது இப்பொழுது உண்மையில் இருப்பதைப்போல், ஒரு சிலரால் அரசாளப்படுவதாக இருக்குமானால், அது வெளிப்படையாகவே ஜனநாயகமல்லாததாகிறது. அல்லது போலி ஜனநாயகமாகிறது. அப்பொழுது இந்தப் பொய்ம்மையின் மூலம்தான், அதனுடைய இருப்பை அராஜகச் சிந்தனை தாக்கும்.

*(தொடரும்...)*

## அ றி வி ப் பு க ள் ( A n n o u n c e m e n t s )

**மல்டி மீடியா சென்டர் அரங்கம் (எம்எம்சி, டவுன் ஹால்)**
(MULTI MEDIA CENTRE AUDITORIUM (MMC, Town Hall)

**நினைவூட்டல்: நவம்பர் 8 மற்றும் நவம்பர் 15, வெள்ளியன்று இரவு 8:00 மணிக்கு, திரைப்படக்காட்சி இல்லை.**
**நவம்பர் 16 அன்று சினிமா பாரடிசோ மற்றும் ஃபிலிம் இன்ஸ்டிட்யூட் இணைந்து ஒரு சிறப்பு நிகழ்ச்சியை வழங்குகிறது. அடுத்த வாரம் சந்திப்போம்!**

**நவம்பர் 16 வெள்ளிக்கிழமை -இரவு 8 மணிக்கு, "ஐ வில் கம் பேக் டேன்ஸிங் இன் தி டியூன்ஸ்" (I will come Back Dancing In The Dunes).**



*இயக்கம்: கிறிஸ்டியன் மோர்டெலெட் & ஸ்டான்சின் டோர்ஜாய் கியா,* மங்கோலியா, 2022.
சினிமா பாரடிசோ, ஃபிலிம் இன்ஸ்டிட்யூட் இணைந்து இத்திரைப்படத்தை திரையிடுகிறது.
திரைப்பட இயக்குனர் **ஸ்டான்சின் டோர்ஜாய்** கலந்து கொண்டு இத்திரைப்படத்தை அறிமுகம் செய்யவுள்ளார்.
கதைச்சுருக்கம்: கோபி பாலைவனத்தில் உள்ள மேய்ப்பர்களின் குடும்பத்தில் இளையவரான ஒடாகோவுக்கு 11 வயதுதான். தனது சகோதரியைப் போலவே, அவளும் தனது பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டியின் வழியைப் பின்பற்றி ஒட்டகங்களையும் ஆடுகளையும் பராமரிக்க முடிந்தது. இருப்பினும், தொலைக்காட்சி அவளுக்கு ஒரு புதிய கனவை அறிமுகப்படுத்தியது: மங்கோலியாவின் தலைநகரான உலன்பாதரில் உள்ள தேசிய ஓபராவில் நடனக் கலைஞராக வேண்டும். அவளுடைய தந்தை சொன்ன புராணக்கதைகள் மற்றும் விலங்குகளைப் பராமரிப்பதால் கிடைக்கும் ஆறுதல் ஆகியவற்றில் ஆழமாக வேரூன்றிய அவளது வாழ்க்கை ஒரு பாரம்பரிய பாதையை பின்பற்றி அமைந்துள்ளது. கடுமையான குளிர்காலத்தில் கூட, வெப்பநிலை சுமார் -50 டிகிரி செல்சியஸ் வரை குறையும் போது, குடும்ப முற்றத்தில் எதிரொலிக்கும் பண்டிகை பாடல்கள் வாழ்க்கையை மேலும் பொறுத்துக்கொள்ள வைக்கிறது. எல்லையற்ற சுதந்திரத்தை அவளால் விட்டுக்கொடுக்க முடியுமா என்று அவளை வரையறுத்து பெருமிதம் கொள்கிறாள்... பருவநிலை மாற்றம், நவீனக் கல்வி, டிஜிட்டல் யுகம் ஆகியவை 21 ஆம் நூற்றாண்டில் நாடோடி கலாச்சாரங்களைச் சேர்ந்த பல குழந்தைகள் வாழ்க்கையின்.எதிர்கொள்ளும் இக்கட்டான சூழ்நிலைகளை இத்திரைப்படம் ஆராய்கிறது.
மங்கோலிய திரைப்படம், *ஆங்கிலத் துணை வசனங்களுடன். காலம்: 1 மணிநேரம் 1. நிமிடம்.*
**குறிப்பு: நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன! - ஆரோஃபிலிம் கலெக்ஷன் நிதிச்சேவை கணக்கு எண் 252658**

---

**ஹைவ்-இல் இரவு திரைப்படம்** (Movie Night at Hive)



அன்பார்ந்த அனைவருக்கும்,
***"அன்பே சிவம்"*** - இத்திரைப்படம் நகைச்சுவையையும் இதயப்பூர்வமான தருணங்களையும் அழகாகக் கலந்து, மனித உறவுகளுக்குள் இருக்கும் தெய்வீகத்தின் சாரத்தை வெளிப்படுத்துகிறது, மேலும் கருணை, இரக்கம், மனிதாபிமானம் எவ்வாறு வேறுபாடுகளை விஞ்சும் என்பதைக் காட்டும் தமிழ் திரைப்படம் ஆகும்.

**நேரம்: 8 நவம்பர் 2024, இரவு 7.30 மணி.**
**இடம்: ஹைவ், ஆரோமோட் வளாகம்**
**நுழைவு: இலவசம். அனைவரையும் வரவேற்கிறோம்.**

தொடர்புக்கு: +91 7092197375 (வாட்ஸ்அப்) / +91 9042759540 7092197375 (வாட்ஸ்அப்).

சிரிப்பு, உத்வேகம், மற்றும் சமூக உணர்வின் மாலைப்பொழுதில் எங்களுடன் இணையுங்கள்.
தங்கள் அனைவரையும் சந்திப்போம்.
*ஹைவ் அணி சார்பாக தேஷ்*

---

**நிதிச் சேவையின் அறிவிப்பு** (Financial Service Notice)

நிதிச் சேவையில் கணக்கு வைத்திருக்கும் ஆரோவில் சமூகத்தின் அன்பான உறுப்பினர்களுக்கு,
நீங்கள் ஏற்கனவே அறிந்திருப்பீர்கள், ஹெல்த் ஃபண்ட் பங்களிப்புத்தொகை பெரியவர்களுக்கு ரூ.60 மற்றும் குழந்தைகளுக்கு ரூ.30 உயர்த்தப்பட்டுள்ளது, இது இப்போது முறையே ரூ.660 மற்றும் ரூ.330 ஆக உள்ளது.

இந்த உயர்வு செயல்படுத்தப்பட்டாலும், மென்பொருள் புதுப்பிப்பு முற்றிலும் சரியானதாக இல்லை. இதன் விளைவாக, சில நிதிச் சேவை கணக்குகள் ஹெல்த் ஃபண்டிலிருந்து இருந்து எதிர்பாராமல் கழித்தல் செய்துள்ளதைக் காணலாம், ஹெல்த் ஃபண்டில் உறுப்பினராக பதிவு செய்யாவிட்டாலும் அல்லது ஹெல்த் ஃபண்ட் பங்களிப்புத்தொகை ஏற்கனவே பராமரிப்புத்தொகை மூலம் செலுத்தப்பட்டிருந்தாலும், தனிப்பட்ட கணக்குகளில் இருந்து கூடுதலாக தொகை கழித்தல் செய்யப்படலாம்.
இப்பரிமாற்றம் செயலாக்கப்பட்ட பிறகு அடுத்த மாதம் உங்கள் நிதிச்சேவை கணக்கைச் சரிபார்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம். எதிர்பாராமல் கழிக்கப்பட்டத் தொகையை நீங்கள் கண்டால், திருத்தம்செய்ய நிதிச்சேவைக்கு மின்னஞ்சல் செய்யவும்: financialservice@auroville.org.in

*நிதி சேவையின் சார்பாக, நிக்கோ*

---

Savitri BHAVAN

## அருள் தேவுடன் சாவித்திரியின் மந்திர வசனங்கள் மற்றும் ஹுடாவின் ஓவியங்கள் ஆகியவற்றின் பின்னணியில் ஆழ்ந்த உடற்பயிற்சி



**நவம்பர் 16 & 30, சனிக்கிழமைகளில், மாலை 4:00 - 5:00 மணி, சாவித்ரி பவனில் உள்ள சங்கம் ஹால்.**

**ஆழ்ந்த உடற்பயிற்சி என்றால் என்ன? -** இது நம் உடலின் பழக்கவழக்கங்களை மெதுவாக மாற்றுவதற்கும் அதை தெய்வீகத்தின் சேவகனாக மாற்றுவதற்கும் அன்பின் உழைப்பு. நம் உடல் ஒரு ஸ்பான்ஜிங் தன்மையைக் கொண்டுள்ளது, மேலும் அது உணர்ச்சிகள், ஆற்றல்கள், உணர்வுகள் மற்றும் மற்றவர்களின் எண்ணங்களைக் கூட, நாம் ஒரு பகுதியாக இருக்கும் சூழலில் இருந்து உறிஞ்சி, அதன் அனைத்து அனுபவங்களையும் அதன் உயிரணுகளுக்குள் சேமித்து வைக்கிறது. இந்தப் பழக்கத்தைத் திரும்பப் பெற விரும்புகிறோம். உயிரணுக்களுக்குள் ஸ்ரீ அன்னையின் நடைமுறை என்னவென்றால், உயிரணுக்கள் தாமாகவே மேல்நோக்கித் திரும்பி, இறைவனுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருந்தன. நாமும் இந்தப் பயிற்சியைச் செய்து, இறைவனின் செயலுக்கும் அருளுக்கும் காத்திருக்க விரும்புகிறோம். தற்போதைய நேரத்தில், அவர்களின் நுட்பமான உடல்களில், அவர்களின் மாற்றும் பணியைத் தொடரும் ஸ்ரீ அன்னை மற்றும் ஸ்ரீஅரவிந்தரின் பணிகளில் பயிற்சியாளர்களாக இது நம்மை அனுமதிக்கிறது.

ஆழமான உடற்பயிற்சி என்பது நேரடி, எளிமையான, நுட்பமான மற்றும் அனுபவமிக்க சிறிய நடைமுறைகளை உருவாக்குகிறது. இவை உடலின் உணர்வுகள், ஆற்றல்கள், அதிர்வுகள், இயக்கங்கள், உணர்ச்சிகள் மற்றும் எண்ணங்களுக்குள் செய்யப்படுகின்றன. நமது உடலின் ஒவ்வொரு உயிரணுவின் மையத்திலும் இருக்கும் தூய்மையான பொருளைக் கண்டறிவதே அபிலாஷை. தூய்மையான பொருள் என்பது உலகில் இருந்து உறிஞ்சப்படும் சிக்கல்கள் குறைவாகவும், தெய்வீகத்துடன் நேரடியாக இணைக்கும் மற்றும் தெய்வீக குணங்களைப் பெறும் திறன் மிக உயர்ந்ததாக இருக்கும்.

**ஆதாரம் -** ஆன்மாவும் சடப்பொருளும் ஒன்றிணைக்கும் பல புள்ளிகளைக் கொண்டுள்ளன. இதை நாம் நமது உடல் மற்றும் நுட்பமான உடலுக்குள் ஆராயலாம். நமது உடலை தெய்வீகத்துடன் இணைக்கவும், நமது உள் பயிற்சிகளைச் செய்யவும் பூரண யோகத்தில் பல ஆதாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சாவித்ரியின் மந்திர வார்த்தைகளை, நம் உடலின் உட்பொருளுக்குள் வைத்து, அவற்றின் வார்த்தைகளின் மூலம் செயல்படும் தெய்வீக செயலைப் பெறுவதன் மூலம் படிக்கலாம். பயிற்சியின் மூலம், தெய்வீக செயல்களின் அலைகள் செயல்படுவதற்கும், உள்ளே குடியேறுவதற்கும் நம் உடலிலும் முழு உடலிலும் இணைக்கப்பட்டு காத்திருக்க முடியும். உடற்பயிற்சிக்கு, உண்மையான நேரத்தில் தெய்வீக உணர்வுடன் ஒரு உண்மையான இணைப்பு தேவை. ஹுடாவின் ஓவியங்கள் இதற்கு பெரும் உதவியாக உள்ளன. நாம் கவனம் செலுத்தவும், ஓவியத்தின் உணர்வுடன் இருக்கவும் கற்றுக் கொள்ளும்போது, தெய்வீக மூல உணர்வின் சில பரிமாணங்கள் நமக்குத் திறக்கின்றன.

**வழிநடத்துபவர் பற்றி -** *அருள் தேவ் தனது 'இன்டு கிரேட் டெப்த் ஆஃப் யுவர் பீயிங்' மற்றும் 'தி ஃபிளேம் விதின்' புத்தகங்கள் மூலம் தனது உள்ளார்ந்த வேலையைப் பகிர்ந்து வருகிறார். பொறியியல் பட்டப்படிப்பை முடித்த பிறகு, 30 ஆண்டுகளாக அவர் பயிற்சி, அகவளர்ச்சி, பூரணக்கல்வி மற்றும் மனித வள ஆலோசனைத் துறையில் உள்ளார். பூரண யோகத்தில் அவரது ஆழ்ந்த ஆராய்ச்சியானது தி மதர்ஸ் அஜண்டா, சாவித்ரி, ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் பிற படைப்புகளின் பின்னணியில் ஆழ்ந்த உடல் பயிற்சிகள் ஆகும். உணர்வுகள், ஆற்றல், உணர்ச்சிகள், எண்ணங்கள், நினைவுகள் ஆகியவற்றின் மட்டத்தில் உடலில் உள்ள சிக்கல்களை மாற்றுவதற்காக அவர் மற்றவர்களுடன் அகப் பயிற்சி செய்கிறார் மற்றும் பகிர்ந்து கொள்கிறார். நமது உடலை அதன் அனைத்து உயிரணுக்களிலும் முழுமையாக அறிந்துகொள்வதும், தெய்வீக குணங்களுடன் இணைக்க அதன் சாரப்பொருளைத் திறந்து, முழுமையாக ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருப்பதும் அபிலாஷையாகும்.*

---

## <u>மாற்றத்தை ஏற்படுத்தும் ஐந்து நாள் பயிலரங்கு (A five day Transformative Workshop)</u>

### Born Free to Live Free (சுதந்திரமாக வாழ சுதந்திரமாகப் பிறந்தார்)




உங்கள் சிறந்த வாழ்க்கையையும் உங்கள் நோக்கத்தையும் வாழ்வதிலிருந்து உங்களைத் தடுக்கும் நம்பிக்கைகளை எவ்வாறு சிதைப்பது என்பதைக் கண்டறியவும்.

**மாற்றத்தை ஏற்படுத்தும் ஐந்து நாள் பயிலரங்கு -**
**வழங்குபவர் ஆன்ஷ் சபின் பிளான்ச்ஃப்ளவர்**
**5 நாட்கள்: நவம்பர் 11 திங்கள் - நவம்பர் 16 வெள்ளி**

பித்தாங்காவில் தினமும் 1 மணிநேரம்: மதியம் 12.45 - 1.45 மணி
18/11 திங்கள் அன்று மதியம் 12.45 மணிக்கு போனஸ் அமர்வு உட்பட.

ஆன்ஷ் சபின் பிளான்ச்ஃப்ளவர், புராடக்டர் கேலகர் ஆலோசகர்கள் பிரிவின் ஆலோசகர் ஆவார். அவரது வழிகாட்டியான பாப் புரோக்டர் இன்றுவரை சுய மேம்பாடு மற்றும் மனித திறன்களின் முன்னணி ஆசிரியராக உள்ளார். மேலும் இந்த அணுகுமுறை ஒரு முழுமையான ஒன்று - ஆன்மீகம், மனம் மற்றும் உடல்.

*நிபந்தனைகள்: முன் பதிவு தேவை. ஆரோவிலியர்கள் அல்லாதவர்களிடமிருந்து பணமில்லா பங்களிப்பு கோரப்பட்டது வாட்ஸ்அப் பதிவுக்கான QR-குறியீட்டை ஸ்கேன் செய்யவும்:*

**இத்தாலிய மொழி வகுப்பு** (ITALIAN CLASS)

வணக்கம்! நீங்கள் புதிதாக இத்தாலிய மொழியைக் கற்க விரும்பினால் அல்லது ஏற்கனவே அதைப் படித்திருந்தாலும், அதைத் தொடர்ந்து பயிற்சி செய்ய விரும்பினால், ஃபிரான்செஸ்கா இப்போது தனிப்பட்ட முறையில் அல்லது குழுவாகப் பாடங்களைக் கற்றுக் கொடுக்கவுள்ளார் என்பதை தயவுசெய்து அறியவும்! ஃபிரான்செஸ்கா கலை மற்றும் கலாச்சார உலகத்துடன் நெருக்கமாக இணைந்திருப்பதால், பாடங்கள் இத்தாலிய மொழியின் பயன்பாட்டை ஆராய்வது மட்டுமல்லாமல், இத்தாலிய கலாச்சாரம், கலை மற்றும் வரலாற்றின் பல்வேறு அம்சங்களுக்கு ஒரு சுவாரஸ்யமான அறிமுகமாக இருக்கும். என்னுடன் உங்கள் இத்தாலிய மொழியைப் பயிற்சி செய்யவும் மேலுதம் அறியவும் விரும்பினால், avgateofdreams@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு எழுதவும். *ஃபிரான்செஸ்கா*

**கிரியேட்டிவ் ரைட்டிங்** (CREATIVE WRITING)




உள்ளத்தில் இருந்து எழுதுவது என்பது, ஒருவரின் வெவ்வேறு துணை ஆளுமைகள், நம்மை நாமே நாசமாக்கிக் கொள்ளும் உணர்வற்ற உத்திகள் மற்றும் தடைகளைக் கடந்து, பரிணாம வளர்ச்சிக்கு நாம் உள்ளுக்குள் வைத்திருக்கும் தன்னிச்சையான வளங்களை அறிந்து கொள்வதற்கான ஒரு கருவியாக எழுத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைக் கற்றுக்கொள்வது ஆகும்.

மேலும், சொற்களின் ஒலிகள் மற்றும் சந்தங்களைப் பரிசோதித்தல், கதைசொல்லலின் உள்ளார்ந்த திறமையை மீண்டும் கண்டறிதல், இழந்த படைப்பாற்றலை மீண்டும் செயல்படுத்துதல், நினைவாற்றல் மூலம் கற்பனையின் உள் தசையைப் பயிற்சி செய்தல் போன்ற பல படைப்பு எழுத்துப் பயிற்சிகளையும் அமர்வின்போது பயிற்சி செய்யலாம்.
இந்த அமர்வில் சேர நீங்கள் எழுத்தாளராக இருக்க வேண்டிய அவசியமில்லை! உங்கள் ஆர்வம், ஆராயும் ஆசை ஆகியவற்றுடன், உங்களின் ஒரு பேனா, ஒரு நோட்டுப்புத்தகம் கொண்டு வாருங்கள்! அவ்வளவுதான்! அமர்வின் காலம்: 1 மணிநேரம் 30 நிமிடம்.

தகவலுக்கு மற்றும் உங்கள் அமர்வை முன்பதிவு செய்ய, இம்மின்னஞ்சலுக்கு எழுதவும். ijustwannawrite.email@gmail.com
நீங்கள் என்னைப் பற்றி மேலும் அறிய விரும்பினால், https://www.youtube.com/@IJustWannaWrite-ht9ql/videos -இல் எனது விலாக் "I Just Wanna Write" என்பதைச் சரிபார்க்கவும் அல்லது எனது வலைப்பதிவு https://ijustwannawrite.com
நல்ல எழுத்துடன் தொடர்வோம்! *ஃபிரான்செஸ்கா*

---

**தி பொட்டேன்ஷியல் ஆஃப் கைன்ட்னெஸ் (கருணையின் சாத்தியம்)** (The Potential of Kindness)

**உலக கருணை தினம் (நவம்பர் 13ஆம் தேதி), மாலை 4 - 5.30 மணி**
**மாலோகா ஹால், அனித்யா குடியிருப்பு**

எஸ்டிஇசட் (SDZ), 'The Potential of Kindness' ('கருணையின் சாத்தியம்') என்ற திட்டத்திற்கு நிதியளிக்கும் என்பதை சமூகத்துடன் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைகிறோம்.

இத்திட்டம் ஆரோவில்லுக்குள் கருணை பற்றிய நமது புரிதலை ஆழப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நிரூபிக்கப்பட்ட கருணையை உருவாக்கும் தலையீடுகளின் தாக்கத்தை ஆராய்ந்து அளவிடவும், இந்த அறிவைப் பகிர்ந்து கொள்ளவும் திட்டமிட்டுள்ளோம், இதன்மூலம் முழு சமூகத்திற்கும் ஆதரவளிக்க இது பயன்படும்.
உலக கருணை தினத்தன்று (நவம்பர் 13 புதன்) நடைபெறும் எங்கள் தொடக்க நிகழ்வில் கலந்துகொள்ள உங்களை அழைக்கிறோம். இத்திட்டத்தைப் பற்றி மேலும் அறியவும், உங்கள் யோசனைகளைப் பகிர்ந்து கொள்ளவும், நீங்கள் எவ்வாறு பங்கு வகிக்கலாம் என்பதைக் கண்டறியவும் இது ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கும். கருணையில் ஆர்வமுள்ள மற்றவர்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம். நமக்குள்ளும் நம் சமூகத்துக்குள்ளும் கருணையை வளர்க்கும் பயணத்தைத் தொடங்குவதற்கான வாய்ப்பாகவும் இது அமையும்.
இந்தத் திட்டம் சமூகம் மற்றும் அதற்கு அப்பால் உள்ள பரந்த அளவிலான இணைப்பு, பச்சாதாபம், கருணை ஆகியவற்றை ஊக்குவிக்கும் என்று நம்புகிறோம்! *ஹெலன் & நிகேதனா*

---

Centre d'Art Auroville

**கண்காட்சி பொது அழைப்பு** (Exhibition Open Call)

ஒருங்கிணைந்த ஓவியக்கலைத் திட்டங்களின் சமர்ப்பிப்புகளை சென்டர் டி'ஆர்ட் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறது.
ஓவியக்கலைஞர், தனது திட்டத்தின் விளக்கம், அவர் அளித்த படங்கள் மூலம், தமது படைப்புக்கு உயிர் கொடுத்த எழுச்சியூட்டும் கருத்தை தெரிவிக்கவேண்டும். கண்காட்சிக்கான சமர்ப்பிப்பு ஒத்திசைவாகவும், ஆராயப்படும் கருப்பொருளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதும் முக்கியம். உங்கள் திட்டமும் படைப்பும் சமீபத்திய காலங்களில் உருவாக்கப்பட்ட ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக இருந்தால் நல்லது.
அனைத்து ஓவியக்கலைஞர்களும் தங்கள் திட்டங்களை 2025-2026 சீசனில் கண்காட்சிக்காக சமர்ப்பிக்க வரவேற்கிறோம். நீங்கள் ஆர்வமாக இருந்தால், 31-01-2025க்கு முன் உங்கள் படைப்பை centredart@auroville.org.in -க்கு அனுப்பவும் அத்துடன் மின்னஞ்சலில் உள்ள பொருள் பகுதியில் "கண்காட்சிக்கு சமர்ப்பிப்பு" (Exhibition Submission) என்று எழுதவும்.

மின்னஞ்சலில் இந்த விவரங்கள் இருக்கவேண்டும்:
- தொடர்பு விவரங்கள். - ஓவியக்கலைஞரின் சிறு சுயசரிதை. - ஓவியக்கலைத் திட்டத்தின் தலைப்பு மற்றும் அதன் விளக்க உரை. - ஜேபிஜி (jpg) அல்லது பிடிஎஃப் (pdf) -இல் சில படைப்புகளின் படங்கள் (அதிகபட்சம் 20 படங்கள்) குறைந்த டெஃப்னிஷனில் இருக்கவேண்டும்.

ஓவியத்திற்கான இடத்தைப் பயன்படுத்துவது இலவசம், ஆனால் படைப்புக்கான போக்குவரத்து மற்றும் கண்காட்சி நேரத்தில் கேலரியில் இருப்பது ஓவியக்கலைஞரின் பொறுப்பாகும்.

பிப்ரவரியில் தேர்வு நடத்தப்பட்டு சில வாரங்களில் முடிவு தெரிவிக்கப்படும். அனைத்து சமர்ப்பிப்புகளுக்கும் பதில் கிடைக்கும். உங்கள் விண்ணப்பத்தைப் பெற ஆவலுடன் காத்திருக்கிறோம்.
*சென்டர் டி'ஆர்ட் ஆரோவில் அணி*

## ஆரோவில் பாரத் நிவாஸ் இந்தியப் பெவிலியன் வழங்கும்

**Nitividhana (நீதிவிதான)**
**நாகரிக பொதுக் கொள்கை**

**கல்வி, நீடித்தத்தன்மை மற்றும் ஆளுமைக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறைகள்**
3-நாள் பயிலரங்கம், ஆரோவில் | 16 மணிநேரம் | கோட்பாடு & பயிற்சி



**2024, 15 நவம்பர் - நவம்பர் 17**
**ஆரோவில் - விடியல் நகரம், பாண்டிச்சேரி**

- பொது தலைமைத்துவத்திற்கான ஸ்ரீ அரவிந்தரின் பார்வை
- ஆளுகையில் நாகரீக லென்ஸ்
- கொள்கை சிந்தனைக்கான பூரணக் கல்வி
- தொகுப்பு: தத்துவம் & கொள்கை கட்டமைப்புகள்

Scan QR to Register

பதிவு செய்ய QR-ஐ ஸ்கேன் செய்யவும்.
nitividhana@brhat.in +91 7506091706

---

## 17.11.2024 அன்று ஸ்ரீ அன்னையின் அறை தரிசனம் (The Mother's Room Darshan On 17.11.2024)



அன்பார்ந்த நண்பர்களே,
ஸ்ரீ அன்னையின் மகாசமாதி நாள் நெருங்கி வருகிறது. ஸ்ரீ அன்னையின் அறை தரிசனத்திற்காக நவம்பர் 17 ஞாயிறு அன்று திறக்கப்படும் என்று ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம் அறிவித்துள்ளது.

ஸ்ரீ அன்னையின் அறையை அனைவரும் தரிசனம் செய்யலாம். அறை தரிசனத்திற்கு டோக்கன்கள் தேவையில்லை.
தரிசனத்திற்கான நேரம் அடுத்த வாரம் வெளியிடப்படும்.
அன்புடன், *ஆண்ட்ரியா*

---

## யுவாபே கல்வி இணைப்புத் திட்டம் - ஏஐ பயிற்சி வகுப்பு (Yuvabe Education's Bridge Program - AI Course)

வணக்கம்,
உங்களுடன் ஒரு புதிய வாய்ப்பைப் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்! "Yuvabay Education's Bridge Program" ஆனது, ஆரோவில் பிராந்தியப் பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்காக AI- ஃபர்ஸ்ட் ஃபுல் ஸ்டாக் டெவெலப்மென்ட் பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது. 02.12.2024 முதல், இந்த 3-மாத படிப்புப் பிரிவை, அனுபவம் வாய்ந்த பயிற்றுவிப்பாளர்களால் வழிநடத்தப்படும் நடைமுறைத் திட்டங்களுடன் இயந்திரக் கற்றல், தரவு அறிவியல், ஏஐ (AI) நெறிமுறைகள் உள்ளிட்ட அத்தியாவசிய ஏஐ (AI) தலைப்புகளில் ஆழமான பயிற்சியை வழங்கும்.

இந்தத் திட்டம் மதிப்புமிக்க, எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் திறன்களை உருவாக்க வடிவமைக்கப்பட்டுள்ளது, தொழில்நுட்பத்தில் வெகுமதி அளிக்கும் தொழிலுக்கு வழி வகுக்கிறது. நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவர் இதைப் பயில ஆர்வமாக இருந்தால், மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
எங்களை தொடர்பு கொள்ளவும்: தொலைபேசி: 9677604467
மின்னஞ்சல்:bridge@yuvabe.com

சமூக ஊடகங்களில் எங்களைப் பின்தொடரவும்:
- இன்ஸ்டாகிராம்: instagram.com/yuvabe.auroville
- ஃபேஸ்புக்: facebook.com/yuvabe.auroville
- லிங்க்ட்இன்: linkedin.com/company/yuvabe
- யூடியூப்: youtube.com/@yuvabe.auroville

---

### ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள் – ஆன்மா

**ஆன்மாவால் இறைவனை நினைக்க முடியாது. ஆனால் உறுதியுடன் அவனை அறியும்.**

**ஒரு மலர் சூரியனைக் கண்டு மலர்வதைப் போல உன் ஆன்மா ஒளியைக் கண்டு மலரும்.**

## **ஆரோவில் சைக்கிள் சவாரி** (AUROVILLE CYCLE RIDE )

அன்பார்ந்த அனைவருக்கும்,
சைக்கிள் சவாரியில் கலந்துகொள்பவர்கள் **09.11.2024 அன்று காலை 06.00 மணிக்கு** எங்களுடன் இணையுமாறு அழைக்கிறோம். டவுன் ஹாலில் பிரதான வாகன நிறுத்துமிடத்தில் இருந்து ஆரோவில்லைச் சுற்றி 20 கிலோமீட்டர் தூரத்திற்கு சைக்கிள் ஓட்டுதல்.
சைக்கிள் ஓட்டுதலின் விழிப்புணர்வையும் முக்கியத்துவத்தையும் உருவாக்க ஒன்றாக மிதிப்போம்.
உங்கள் சொந்த சைக்கிள் மற்றும் தண்ணீர் பாட்டில் கொண்டு வாருங்கள்.




**குறிப்பு:** சைக்கிள் இல்லாதவர்கள் எங்களிடமிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுத்து சவாரிக்குப் பிறகு மீண்டும் திருப்பிக் கொடுக்கலாம்.
(கிடைப்பதைப் பொறுத்து / முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை கிடைக்கும்).

**சைக்கிள் சவாரி அட்டவணை**
காலை 06.00 மணி : டவுன் ஹால் மெயின் பார்க்கிங்கில் பதிவு செய்தல்.
காலை 06.00 - 07.30 மணி: ஆரோவில்லைச் சுற்றி சைக்கிள் ஓட்டுதல்
காலை 07.30 - 08.00மணி : டவுன் ஹால் வளாகத்தில் காலை உணவு
greenridecycles@gmail.com / +91 9443074825

---

## **தாமோதரன் அவர்களை நினைவுகூர்கிறோம்** (Remembering A Damodaran)



31.10.2024 அன்று மாலை, குயிலாப்பாளையத்தைச் சேர்ந்த தாமோதரன் அவர்கள் ஸ்ரீ அன்னையின் திருவடியை அடைந்ததை அறிந்தோம், இது ஆரோவில்லின் ஆரம்ப நாட்களின் நினைவுகளைத் தூண்டியது (1969 - 1976 ஆஸ்பிரேஷன் - நலவாழ்வு - ஆரோமாடல் பகுதிகளில் குறிப்பாக). ஆரோவில்லின் ஆரம்ப வருடங்கள்.

அந்த சமயம் ஸ்ரீ அன்னையின் தனிச் செயலாளர்கள் எங்களைச் சந்தித்து முக்கியப் பணிக்காக ஸ்ரீ அன்னையின் வழிகாட்டுதலைப் பெற உதவினார்கள், குயிலாப்பாளையத்தைச் சேர்ந்த சில இளைஞர்களும் அப்பணியை மேற்கொண்டனர், அவர்கள் இல்லாமல் அப்பணிகள் நடந்திருக்காது, நமது தாமோதரன் அவர்களும் ஸ்ரீ அன்னையின் ஆரம்பகால "ஹீரோ வாரியர்களில்" ஒருவர் ஆவார். ஸ்ரீ அன்னையின் சக்தியை அவர்கள் நேரடியாக ஏற்றுக்கொண்டார்கள்.

தாமோதர்.. என்று சமூகத்தில் மற்றவர்களால் அன்புடன் அழைக்கப்படும் - 26-28 வயதுடைய இளம், அழகான, ஆர்வமுள்ள இளைஞன் - தனது சைக்கிளில் (எல்ஃப் வீரனைப் போல). (சில சமயங்களில் சைக்கிளின் பின் இருக்கையில் கூச்ச சுபாவத்துடன், ஆச்சர்யமும், கனவுகளும் நிறைந்த பெரிய கண்களுடன் குண்டாகத் தோற்றமளிக்கும் ஒரு குழந்தையுடன், அதாவது அவரது மகன் செல்வராஜுடன்), ஆரோவில்லுக்கு தனது படைப்புத் திறன்களுடன் சேவை செய்ய எப்பொழுதும் தயாராக இருப்பார்; எங்களுடைய சவால்களை எதிர்கொள்ள அவர் எப்போதும் தவறியதில்லை; **காரியஸ்தரிடம்** (அவரிடம்) ஒரு வேலையை ஒப்படைக்கும்போது அந்த வேலை ஏற்கனவே முடிந்துவிட்டது என நீங்கள் உறுதியாக நம்பலாம். ஒரு நம்பகமான நபர், சமையலறை முதல் தொழிலாளர் மேலாண்மை வரை, அலைந்து திரிகிற மற்றும் அனைத்து வகையான பணிகளிலும் ... அவர் எப்போதும் இருந்தார்.

புளியந் தோப்பில் உள்ள வீட்டின் திண்ணையில் அமர்ந்து மந்திரங்கள் பாராயணம் செய்த & சித்தர் பாடல்களைப் பாடிய அவரது தந்தையை நினைவு கூர்கிறோம் - அவர் ஓர் சுவாரஸ்யமான ஆன்மீகவாதி, அவரது உடன்பிறந்தவர்கள் அனைவருக்கும் ஸ்ரீ அன்னை ஆரோவில்லில் வசிப்பிடம் அளித்து, அவரது பணிக்காக அவர்கள் தயார்படுத்தப்பட்டனர்.

தாமோதரன் அவர்கள் போப்போவின் பரிசோதனை வீட்டு மேம்பாட்டிற்காக கிராமத்தில் இருந்த தமது ஒரே வீட்டை வழங்கினார்! கிராமக் குடும்பங்களுக்கான நலத்திட்டங்கள் செயல்படுத்தும்போது அவர்களது உண்மையான ஒருங்கிணைப்புக்கு முன்னர், தாமோதரன் அவர்களின் குடும்பமும் எங்களுடன் இணைந்தது, மேலும் அவர் குழுவில் வலுவான, செயல் திறமுடைய நபராக இருந்தார். நாங்கள் பிராமிஸ் குடியிருப்புக்கு மாறிய பிறகு எங்களுடைய தொடர்புகள் குறைந்துவிட்டன. அவர்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் எங்கள் பிரார்த்தனைகளும் இரங்கலும் உரித்தாகுக.

*சூரியனுக்கு மலரின் மறுமொழியால் பதில் சொன்னார்கள்.*
*அவர்கள் தம்மை ஸ்ரீ அன்னையிடம் ஒப்படைத்துவிட்டனர், வேறு எதுவும் கேட்கவில்லை ...*
*ஸ்ரீ அன்னை அவர்களின் கைகளைப் பற்றினார், அவர்களுக்கான பாதைகளைத் தேர்ந்தெடுத்தார்.*
*(சாவித்திரி பக்கம். 364)*

*திரு. வரதராஜன் அவர்கள்*

---

**ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள் – ஆன்மா**

**ஆன்மா நித்யமானது, எல்லாவற்றையும் தன்னுட்கொண்டது, இந்த திறமையின்மைகள், இயலாமைகளெல்லாம் அது சம்பந்தப்பட்டவரை உண்மையான இருப்புடையவை அல்ல.**